No. of Printed Pages : 7

www.tnschools.co.in

300010

June 2015

**5151**

பதிவு எண் | 3 | 0 | 0 | 0 | 0 | 4 | 9 |

# தமிழ் - முதல் தாள்

# Language — Part A — TAMIL — Paper I

**(செய்யுள், உரைநடை)**

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6x1=6**

**1.** கணி மேதாவியாரின் காலம் :

(அ) கடைச் சங்க காலம் (ஆ) சங்கம் மருவிய காலம் (இ) இடைக் காலம்

**2.** ''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'' என்று பாடியவர் :

(அ) கவிமணி (ஆ) பாரதிதாசன் (இ) பாரதியார்

**3.** ஆறு காண்டங்களைக் கொண்ட நூல் :

(அ) சிலப்பதிகாரம் (ஆ) கம்பராமாயணம் (இ) சீறாப்புராணம்

[ திருப்புக

4. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று __________ இல்லாமை.
(அ) வாக்குரிமை (ஆ) பேச்சுரிமை (இ) சொத்துரிமை

5. உலகம் என்ற தமிழ்ச் சொல் __________ என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது.
(அ) உலகு (ஆ) உலவு (இ) உளது

6. இராமலிங்கர் அருளிய பாடல்கள் __________ எனப்படும்.
(அ) தேவாரம் (ஆ) திருவருட்பா (இ) திருப்புகழ்

## பகுதி - 2

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **6x1=6**

7. இல்லாரை __________ எள்ளுவர்.

8. சீறாப்புராணத்தை இயற்றியவர் __________ .

9. நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் __________ பேரெல்லையும் கொண்ட நூல்.

10. 'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனத் __________ உலகுக்கு எடுத்துரைக்கிறது.

11. வெறும் பேச்சுக்கும் __________ பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.

12. 'இன்னா செய்தார்க்கும்' என்னும் திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் __________ .

## பகுதி - 3

**III. பொருத்துக.** **4x1=4**

| | | |
|---|---|---|
| 13. நாளிகேரம் | - | குப்பை கூளம் |
| 14. அங்கணர் | - | கூறியது மறவாமை |
| 15. செறிவு | - | சிவன் |
| 16. செத்தை | - | தென்னை |

## பகுதி - 4

**IV. விடைக்கேற்ற வினா அமைக்க.** **4x1=4**

**17.** இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.

**18.** இந்திய அரச பாரத ரத்னா என்ற உயரிய விருதை அண்ணல் அம்பேத்கருக்கு வழங்கியது.

**19.** ''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'' என்பார் திருமூலர்.

**20.** இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும்.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

**V.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

**21.** கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை? யாருக்குக் கொண்டு சென்றான்?

**22.** வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை எவை?

**23.** காலமறிந்து செயல்படுவது எவ்வாறு?

**24.** பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?

**25.** திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?

**26.** குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர்?

**27.** உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?

[ திருப்புக

## பகுதி - 2

**VI.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்க. **5x2=10**

**28.** செய்திப் படங்கள் மூலம் நாம் அறிவன யாவை?

**29.** நோய் வருவதற்கான காரணம் பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன?

**30.** தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.

**31.** ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

**32.** இயேசுவின் மலைப்பொழிவு நூலைப் படித்து காந்தியடிகள் உணர்ந்ததென்ன?

**33.** சத்திய தருமசாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?

**34.** இடைநிலையாசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

## பகுதி - 1

**VII.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்க. **3x4=12**

**35.** சீறாப்புராணம் - குறிப்பு எழுதுக.

**36.** கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக.

**37.** விருத்த மாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை.

**38.** தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.

**39.** நமது கை, கால்களின் பயன்கள் பற்றியும் நாம் செல்லும் வழி பற்றியும் இளந்திரையன் கூறுவன யாவை?

## பகுதி - 2

**VIII.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்க. **3x4=12**

**40.** சொத்துரிமை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

**41.** கடல் வாணிகம் குறித்து எழுதுக.

**42.** மேடைப் பேச்சின் தொடக்கம் குறித்து நீ அறிந்த செய்திகள் யாவை?

**43.** காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.

**44.** அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் - 10)

**IX.** கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

**45.** வளர்ந்தனை பால்முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத்து -இளங்கனியாய்த்
தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

(i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

(ii) முத்தமிழ் - விரித்தெழுதுக.

(iii) புத்திக்குள் உண்ணப்படும் தேன் எது?

(iv) விளம்பக் கேள் - பொருள் எழுதுக.

(v) பாடலில் பயின்று வந்துள்ள மோனைகளை எடுத்தெழுதுக.
( ஏதேனும் 2 இணை )

[ திருப்புக

**46.** கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த சான்றோர் காந்தியடிகள் என்பது உலகறிந்த செய்தி. ஒரு முறை தம் மனைவி கஸ்தூரிபாய் காந்தி, ஆசிரமத்திற்கு வாங்கிய காய்கறிகளில், வழக்கத்திற்கு அதிகமாக ஓர் அணா செலவு செய்ததற்குக் காந்தியடிகள் கடிந்து கொண்டார். ஆசிரமத்தில் தாமே சமையல் செய்து அனைவருக்கும் கொடுத்தார். கழிப்பறை கழுவுதல் ஒரு கலை என்றார். தம் கழிவுகளை வேறு ஒருவர் அகற்ற விடாமல் தாமே அகற்றினார்; எழுதித் தேய்ந்த ஒரு பென்சிலாக இருந்தாலும், அதை இழக்க மனம் வராமல் தேடுவார்; சிறு காகிதத்தையும் வீணாக்காமல் அதில் கடிதங்களுக்கு மறுமடல் எழுதுவார். அவர் விரும்பியிருந்தால் அரச வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். ஆனால் எளிமையை ஓர் அறமாகப் போற்றிய அவருடைய மனம், அதற்கு இடம் தரவில்லை; பகட்டான வாழ்க்கையைப் பாவம் என்று கருதினார் அண்ணல் காந்தியடிகள்.

**வினாக்கள்:-**

(i) எது உலகறிந்த செய்தி?

(ii) கஸ்தூரிபாய் காந்தி அதிகமாகச் செலவு செய்தது எவ்வளவு?

(iii) காந்தியடிகள் எதனை ஒரு கலை என்றார்?

(iv) காந்தியடிகள் பகட்டான வாழ்வை எவ்வாறு கருதினார்?

(v) காந்தியடிகள் எளிமையை எவ்வாறு போற்றினார்?

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

## பகுதி - 1

**X** கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. **2x8=16**

**47.** (அ) கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

(ஆ) பெரியாரைத் துணையாகக் கொள்வதன் இலக்கணம், அதனால் வரும் சிறப்பு, பெரியார் துணையல்லாத வழி ஏற்படும் இழிவு ஆகியன குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**48.** (அ) வள்ளலார் அருளிய பாடல்கள் பற்றியும் தமிழ்ப்பற்று குறித்தும் விளக்கி எழுதுக.

அல்லது

(ஆ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப் பாடுகள் குறித்து எழுதுக.

## பகுதி - 2

**49.** செய்யுள் வடிவில் விடை தருக. **2+2+3+3=10**

(அ) உலகத்தோடு - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'விடல்' என முடியும் குறள்.

(இ) 'துன்புள' எனத் தொடங்கும் கம்பராமாயணம்.

(ஈ) 'உலகியலின் ' - எனத் தொடங்கும் தமிழ் வளர்ச்சிப் பாடல்.

-o0o-